**மஸ்கெலியா பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மஸ்கெலியா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மஸ்கெலியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் எனது பொபழிப்பறிக்கையின் 1.2.2 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஈ) அவதானிப்புக்கள் தவிர என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 805,711 மற்றும்முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,240,030 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின இறுதி திகதியில் காணப்பட்ட 13 நீர் தாங்கிகள், 01 தொலைக்காட்சி இயந்திரம், 12 நூலகப் புத்தகங்கள் மற்றம் கழிவுப் பொருள் சேகரிப்பு நிலையத்தின் 10 உபகரணங்களின் கிரயம் இனங்காணப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிரயத்தை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அப்பொருட்களை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) சட்டங்கள்** | | | |
| i 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (a) 47 (2) (1) பிரிவு | மீளாய்வாண்டின் கட்டிட திட்டங்களை அங்கீகரிப்பதற்கு முன்னர் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 03 கட்டிடங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விண்ணப்பதாரிகளால் அந்நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டு நிர்மாணங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஆ) உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| 2016 மார்ச் 17 ஆந் திகதிய 3/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | (அ) 8 கடைகளில் இருந்து ஒரே தடவையில் அறவிடப்படும் தொகை ஒரே தடவையில் செலுத்தியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் குத்தகை உடன்படிக்கையை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| | (ஆ) கடை வாடகையை 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தம் செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் சபையால் 2009 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்த வாடகை அறவிடப்பட்டு வந்தது. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபை 2010 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறு வீதவரி ஆதனங்களை மதிப்பீடு செய்திருக்கவில்லை. | வீதவரி மதிப்பீடு அரச விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.8 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் பிரகாரம் பொது மக்கள் நடமாடும் பொது இடங்களில் பொது வசதிகளை வழங்கும் பொறுப்பு பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் பிரதேச சபையின் அனுமதியின்றி ஸ்ரீபாத யாத்திரிகை சமயத்தில் வருகை தரும் பக்தர்களுக்காக குளிக்கும் பீளி நிர்மாணித்து அதன் அண்மையில் தனியார் கம்பனியொன்றின் உரித்து பெயர் காட்சிப்படுத்தப்பட்டு வெளித்தரப்பினரால் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கட்டண அறவீட்டிற்காக தற்போது குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாக | பொது வசதிகளை வழங்குதல் சபையினால் மேற்கொண்டு சபை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,974,851 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 505,237 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,513,141 | 3,202,897 | 3,277,795 | 1,283,150 | 4,129,674 | 3,431,933 | 4,302,044 | 1,358,047 |
| (ii) | வாடகை | 9,139,000 | 10,022,200 | 7,547,849 | 6,408,335 | 8,232,900 | 5,148,100 | 3,727,413 | 3,933,984 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,261,000 | 1,719,098 | 1,719,098 | - | 1,511,000 | 1,391,422 | 1,391,422 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 70,172,362 | 22,890,490 | 6,145,391 | 19,509,591 | 63,050,973 | 2,376,301 | 1,692,400 | 2,764,492 |
| | | 85,085,503 | 37,834,685 | 18,690,133 | 27,201,076 | 76,924,547 | 12,347,756 | 11,113,279 | 8,056,523 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு- | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| ரூபா 1,762,927 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்க வில்லை. அம்பகமுவ பிரதேச சபையிடமிருந்து கையளிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 561,558 ஆன 74 வீதவரி அலகுகளில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப் பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதற்காக ஆதனங்களைத் தடை செய்யும் நிகழ்ச்சியொன்று ஒழுங்குபடுத்தப்பட்டு உள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டில் 19 கடைகளுக்காக ரூபா 719,000 பட்டியலிடப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 215,550 அதாவது 30 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய தொடர்பான கடைகளிலிருந்து நிலுவை ரூபா 1,168,235 ஆக இருந்தது. | உடன்படிக்கை கால முடிவில் மீண்டும் கடைகளை பொறுப் பேற்கும் போது குறித்த நிலுவையை வைப்புத் தொகையிலிருந்து அறவிட்டுக் கொள்வதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| தெரிவு பரிசோதனையின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி வரையில் நல்லதண்ணி பிரசேதத்தில் 24 அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 60,900 கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 661,121 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 18,848,470 ஆக இருந்தது. . | குறித்த நீதிமன்ற தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அட்டவணைள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 96 ஆம பிரிவின் பிரகாரம் சபைக்குரிய அப்கொட் நீர் முன்மொழிவு முறைமையின் SLS 614 2013 இன் பிரகாரம் இருக்க வேண்டிய பக்டீரியா நியம அளவினை மிகைத்திருக்கையில் சுத்திகரிக்காமல் 76 நீர் பாவனையாளர்களுக்கு குடி நீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | தற்போது நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தால் சுத்திகரிப்பு தாங்கியொன்றை அமைப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக | சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை பயன்படுத்தப்படுகின்ற ரிகார்டன் கழிவுத்தொகுதி அமைந்துள்ள காணி மற்றும் மேலும் 35 காணிகளின் உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நோர்வுட் பிரதேச செயலாளருக்கு இது தொடர்பாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் யூன் 13 ஆந் திகதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கடை | எதிர்காலத்தில் மதிப்பீட்டு வாடகையை | மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை அறவிடப்படாமல் பழைய கடை வாடகை அறவிடப்பட்ட காரணத்தினால் 12 கடைகளில் 06 மாதங்களுக்காக ரூபா 220,200 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட காணி மற்றும் 22 கட்டிடங்களின் பெறுமதி மதீப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதாக. | வேண்டும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய கெப் வண்டியொன்று மற்றும் உழவு இயந்திரமொன்று 2018 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக மஸ்கெலியா பிரதேசத்தில் கராஜ் ஒன்றில் திருத்தம் செய்யப்படாமல் விளைவற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் கெப் வண்டியின் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட என்ஜின் இலக்கமும் பௌதீக ரீதியாக என்ஜினில் காணப்படும் என்ஜின் இலக்கமும் வேறுபட்டிருந்தது. | என்ஜின் இலக்கம் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட இலக்கம் மற்றும் காணப்படும் என்ஜின் இலக்கத்திற்கு இடையே வேறுபாடு தொடர்பாக வழங்கப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்படவில்லையெ யன | என்ஜின் இலக்கம் வேறுபாட்டிற்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட பெறுமதி இனங்காணப்படாத இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் 40 அலுவலக உபகரணங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் சனவரி 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் இருந்து குறைப்பயன்பாட்டுடனும் விளைவற்றும் காணப்பட்டன. | காணப்படும் இடவசதிகள் போதியளவில் இல்லாதமையால் பொருட்கள் தேவையான போது பெற்றுக் கொள்வதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டு ள்ளதாக | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும் |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 583,429 தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 தற்காலிக கடைகள் மூடப்பட்டிருந்தன. | சபையனி களஞ்சியமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கடைகளை நோக்கத்திற்குட்பட் ட செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்த வேண்டும். |
| (ஈ) | நல்லதண்ணி புனித பூமியை அண்மித்து தனியார் காணி உரிமையாளர் ஒருவராலும் மத ஸ்தாபனமொன்றினாலும் அனுமதியின்றி மண் வெட்டி கட்டிடங்கள் மற்றும் மதில் நிர்மாணிக்கப்பட்டு மண் மற்றும் கற்கள் இடையே நீர் வழிக்கு வெளியேற்றப்பட்டு சுற்றாடலுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே | இந்நிர்மாணங்களை இடை நிறுத்துமாறு அறிவித்து கடிதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளத ாக | தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

இன்னுமொரு இடத்தில் அனுமதியின்றி காட்டினை வெட்டி அச்சுக் கற்கள் மூலம் கபானா ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வந்தது.

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 17 பதவிகளில் 69 வெற்றிடங்கள் காணப்பட்டன. | மத்திய மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பதவிகள் அங்கீகரிக்கப்பட வேண்டியதால் இதுவரை வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை என்பதாக | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் |